1982 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, கொடைக்கானலில் நில ஆர்ஜிதம் செய்வதில் சில தடைகள் இருந்தன. அந்தத் தடைகள் எல்லாம் கடந்து 3, 4 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாம் மத்திய அரசினிடத்திலே ஒப்படைத்து விட்டோம். மத்திய அரசு ஒளிபரப்புத் துறையினர் உடனடியாக வேலைகள் தொடங்குவதற்காக டெண்டர்கள் முதலியன விட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்படியும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே 5 சதவிதம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்தப் பகுதி ? ராஜபாளையம் பகுதியா ? திருப்பத்தூர் பகுதியா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஒளி பரப்பு நிலையம் வந்ததற்குப் பிறகு அந்த 5 சதவீதம் பகுதிகளுக்குகூட தெரிகின்ற நிலைமை ஏற்படலாம். ஏனென்றால் பொறியியல் நிபுணர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் சொல்வார்கள். ஆகவே எந்தப் பகுதியிலே தெரியவில்லை என்பதைப்பற்றி இப்போதே சொல்லி அந்தப் பகுதி மக்களுக்கு வீணாக ஒரு ஆர்வத்தை உண்டாக்குவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுதுறையிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கான நிதி உதவி.

* **வினா எண் 346—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள நெல் பற்றிய ஆராய்ச்சி நடத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடம் நிதி உதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், 1981 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு ஆடுதுறை நெல் பரிசோதனை நிலையத்தின் அபிவிருத்திக்கென ரூபாய் 60 இலட்சங்களை அளிக்க இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்காக தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுக்கும் 60 லட்சம் ரூபாயைக் கண்காணிக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்திற்கா அல்லது அரசாங்கத்திற்கா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பல்கலைக் கழகம் கவனிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு என்று பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உள்ளது.

திரு. ந. சிவஞானம் : ஆடுதுறையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நெல், வாழை போன்றவற்றிற்கு ஆராய்ச்சி செய்யப்படுவதைப் போல் கரும்புக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதற்கான ஆராய்ச்சி நிலையம் கடலூரில் இருக்கிறது. இது முழுக்க முழுக்க நெல்லுக்காகவே பயன்படுத்தப் படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை எத்தனை புது ரக நெல் ஆராய்ச்சி செய்து வெளியிடப்பட்டிருக்கிறது ? சென்ற ஆண்டு ஏதாவது புது ரக நெல் வெளி யிடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனிக் கேள்வி போட வேண்டும்.

மேலமணக்குடி—கீழமணக்குடி இடையே இணைப்பு பாலம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 347—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் மேலமணக்குடி-கீழமணக்குடி ஆகிய கிராமங் களுக்கு இடையே இணைப்பு பாலம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இனிவரும் ஆண்டுகளில் இப் பணியை மேற்கொள்ளப் பரிசீலனை செய்யப்படும்.